All kinds of VELONA Products
(WHOLESALE)
Banians * Ladies Vestes
* Panties * Baby Suits
* T-Shirts * Socks
Etc, Etc.
'ARTHE Group'
Contact:
ARTHE JEWELLERS (Pvt) LTD,
111 Kasturiar Road,
JAFFNA.
T'Phone: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

தரமான VELONA
தயாரிப்புகளை
யாழ்நகரில்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
"ARTHE GROUP"
தொடர்பு கொள்க:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(Pvt) லிமிட்டெட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ புரட்டாதி மீ 29 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 10 (15-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-281





அடம்பனில் கொல்லப்பட்ட அரச படையினரின் சடலங்கள் நேற்று நல்லூரில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அச் சடலங்களை இடதுபுறப் படத்திலும் நடுப்படத்திலும் காணலாம்.



அடம்பனில் அரச படையினரிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதியை வலது புறப் படத்தில் காணலாம். (உ)

## ★ ஒன்பது சடலங்களையும்

# புலிகள் இராணுவத்திடம் நேரில் ஒப்படைத்தனர்

## ★ எதிரிகள் இருவர் சந்தித்த மயிர்க் கூச்செறியும் சம்பவம்!!

- அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் -

யாழ்ப்பாணம், அக்டோபர் 15

அடம்பன் மோதலில் கொலையுண்டு, யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட ஒன்பது சிப்பாய்களின் சடலங்களும் புலிகளினால் இராணுவத்தினரிடம் நேரில் கையளிக்கப்பட்டன.

யாழ் பொலிஸ் நிலையம் முன்பாக வைத்துச் சடலங்களைப் புலிகள் இராணுவத்தினரிடம் ஒப்படைத்த மயிர்க் கூச்செறியும் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

களத்தில் எதிரிகளாக இருக்கும் புலிகளும், இராணுவத்தினரும் டுமீல் டுமீல் சத்தம் எதுவுமின்றி சாதாரண முறையில் இராணுவச் சிப்பாய்களின் சடலங்களை கையளித்ததும், ஏற்றுக்கொண்டதும் ஒரு தனித்துவமும் சிறப்பும் வாய்ந்த சம்பவமாகும்.

சடலங்களை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் நேரடியாகவே யாழ் கோட்டை முகாமில் உள்ள இராணுவத்தினருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர் என்றும்-

இதனையடுத்து சடலங்களைக் கையளிப்பது தொடர்பாக இருதரப்பிலும் ஓர் உடன்பாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு இப்படியும் கொடுமை

முள்ளியவளை, அக். 15

ஆயுதபடையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் தம்பி அந்த இடத்திலேயே இறந்தார். குறை உயிரில் இருந்த தமையனை படையினர் வாகனத்தில் கட்டிஇழுத்துக் கொண்டு போனபோது நிலத்தில் தோல், தசை தேய்ந்து உருக்குலைந்த நிலையில் அவர் மரணமானார்.

இப் பரிதாப சம்பவம் கடந்தவாரம் கொக்குத் தொடுவாய்க் கிராமத்தில் இடம் பெற்றது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கொக்குத் தொடுவாயைச் சேர்ந்த கந்தசாமி தர்மலிங்கம் ஆகிய சகோதரர்கள் அகதிகளாக வந்து குமுளமுனையில் தங்கி இருந்தனர்.

கடந்தவாரம் ஒருநாள் கொக்குத் தொடுவாயில் விட்டுவந்த தங்கள் கால் நடைகளைப் பிடித்துவர அவர்கள் அங்கு சென்றனர்.

அங்கு புதர்களில் மறைந்து இருந்த ஆயு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வவுனியா ஊரடங்கு

யாழ்ப்பாணம் அக். 15

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று இரவு 8 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று பிற்பகல் 2 மணியுடன் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இந்த இரண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

15-10-1986
புதன்கிழமை

சுபநேரம்:
4.32 முதல் 6.02 வரை
ராகுகாலம்:
12.02 முதல் 1.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## அறிவித்தல்

(பெயர் மாற்றம்)

கடந்த பல காலங்களாக

INTERSUN GROUP

என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம்

8-10-86 (புதன்கிழமை)

தொடக்கம்

GLORIA TRAVELS

என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், அக்.15

மன்னார் - அடம்பனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற புலிகள்-சிப்பாய்கள் மோதலில் மரணமானசிப்பாய்களில் ஒன்பது பேரின் சடலங்கள் நேற்று நல்லூரில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

உயிருடன் புலிகளினால் பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களும் அங்கு மக்கள் பார்வைக்காக கொண்டுவரப்பட்டனர். அவர்கள் அருகருகே இருத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

சிப்பாய்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நவீன ரக ஆயுதங்கள், தலைக் கவசங்கள், சப்பாத்துக்கள் என்பனவும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

சிப்பாய்களின் சடலங்களைப் பார்வையிடுவதற்கென நாலாதிக்குகளிலும் இருந்து சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரி சாரியாக நல்லூருக்கு வந்து சேர்ந்தனர்.

நீண்ட கியூவில் நின்று சடலங்களையும் ஆயுதங்களையும் அவர்கள் பார்

(4-ம் பக்கம் பார்க்க)

மச்சந்தி மேனி



புயலும் ஒரு நாள் தென்றலாக மாறும் என்று தெரியாமலே சொன்னான் கவிஞன். இந்தத் தோல்வியோடையாவது குடுக்கிறதை குடுத்து விடுவம் எண்டு ஞானம் பிறக்குதோ... பாப்போமே...!



## இவர்களைப்பற்றி...

அடம்பனில் கடந்த வார இறுதியில் அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சமரின்போது புலிகளினால் இரு இராணுவத்தினர் யுத்தக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர் அல்லவா? அவர்கள் இருவரையுமே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

படத்தில் இடது புறத்தில் காணப்படுபவர் லான்ஸ் கோப்ரல் நிமால் பெர்னாண்டோ, வயது 24. மொரட்டுவ வாசி. மொரட்டுவ - மகாவித்தியாலயத்தில் ஜி. சி. ஈ. உயர்தரம் வரைபடித்தவர்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பொருளாதாரம், பூமிசாத்திரம் உட்பட நான்கு பாடங்களில் சித்தியெய்தினார்.

பல்கலைக்கழகம் சேருவதற்குத் தேவையான புள்ளிகளில் நான்கு புள்ளிகள் குறைந்தமையால்

(4-ம் பக்கம் பார்க்க)

## மோதல்

யாழ்ப்பாணம், அக்.15

மடுப்பகுதியில் நேற்று நடமாடிய இராணுவப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பறைய நாளங் குளத்திலும் தம்பனையிலும் நேற்று கடும் மோதல் நிகழ்ந்து வருவதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## பூநகரியில்

யாழ்ப்பாணம் அக். 15

பூநகரி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் நேற்று விடுதலைப் புலிகள் மோதியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய்கள் மறைவிடங்களில் பதுங்கியிருந்ததாகவும் அவர்களைப் புலிகள் தாக்கியதாகவும் அறியவருகிறது. (உ)

## மேலும் மீட்பு

யாழ்ப்பாணம், அக்.15

அடம்பன் மோதலில் விடுதலைப் புலிகளினால் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டமேலும் சில ஆயுதங்கள் குறித்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

சில இஸ்ரவேல் கிரனெட்டுக்கள், சில சமாண்டோ மோட்டார் ஷெல்கள், 3 அங்குல மோட்டார் ஷெல்கள் பரா லைட்டுக்கள், ஏ.கே. றைபிள் ரவைகள் கொண்ட சங்கிலிகள் ஆகியவையே மீட்கப்பட்ட மற்றைய ஆயுதங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது. (உ)

# புலிகளுக்கு இவ்வளவு ஆதரவா? இப்போது உண்மை தெரிகிறது!

## அகப்பட்ட சிப்பாயின் பேட்டி

-உதயன் செய்தியாளர்: கே. எஸ். ராஜா-

யாழ்ப்பாணம், அக். 15

'புலிகளுக்கு இவ்வளவு ஆதரவு இருக்கிறதா? இப்போதுதான் உண்மை தெரிகிறது.

இவ்வாறு அடம்பனில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பண்டார என்ற சிப்பாய் எமது செய்தியாளரிடம் வியப்புடன் தெரிவித்தார்.

காலில் காயமுற்ற நிலையில் இருந்த அவர் மேலும் கூறியதாவது:-

எனது குடும்பத்தின் வறுமைநிலை காரணமாக பல தொழில்களுக்காக முயன்ற எனக்கு இறுதியில் இராணுவத் தொழிலே கைகொடுத்தது.

சிறுவயதினிலேயே தாத்தாவை (தகப்பன்) இழந்த நான் நடக்க முடியாத எனது அம்மாவுக்காகவும், இரண்டு தம்பிமாருக்காகவும் ஒரு அக்காவுக்காகவும் உழைக்க முன்வந்தேன்.

மிகுந்த வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் தருவதாக என்னிடம் கூறப்பட்டது. சுமார் இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளம் எனக்குக் கிடைத்தது. எனினும் சம்பளத்தினை எனது தாயாருக்கோ, அல்லது சகோதரர்களுக்கோ கொண்டு சென்று கொடுக்க எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. தபால் மூலம் மட்டுமே பணத்தினை அனுப்புவேன்.

புலிகளுடன் போர் புரியவென எம்மை அழைத்துச் செல்லும் போது இவ்வாறு நான் அகப்படுவேன் என நினைக்கவில்லை.

போர் இவ்வளவு கொடூரமாக இருக்குமென்றும் நான் நினைக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### தெல்லிப்பளை ப.நோ.கூ.ச. முதலிடம்

பலாலி, அக். 15

1984ஆம் ஆண்டுக்கான மொத்த விற்பனையில் தெல்லிப்பளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 861·3சராசரிபெற்று யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு முகாமைத்துவ சேவை நிலையம் மாவட்டரீதியாக எடுத்த புள்ளி விவரங்களின் படியே இக் கணிப்பீடு நடத்தப்பட்டது.

644·1 சராசரியைப் பெற்ற சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தைப்பெற்றது. (இ—119)

### உப அதிபர்

காங்கேசன்துறை,அக்.15

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி உபஅதிபராக திரு. து. சுந்தரமூர்த்திஐயர் யாழ் கல்விப் பணிப்பாளரால் பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டார். (இ—68)

### பொதுமக்கள் கொண்டு செல்கின்றனர்

யாழ்ப்பாணம், அக்.15

யாழ் பழைய மாநகர சபைக் கட்டட வளவுக்குள் உள்ள தளபாடங்கள், பழுதடைந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள், போன்றவை பொது மக்களால் எடுத்துச் செல்லப் படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ—10)

### வல்வையில் கட்டாக்காலி நாய்கள்

வல்வெட்டித்துறை, அக்.15

வல்வெட்டித்துறையில் அண்மைக் காலங்களில் கட்டாக்காலி, சொறி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

வல்வை நகரசபையும், சுகாதாரப் பகுதியும் இணைந்து இந்த நாய்களை ஒழித்துக்கட்ட முன்வந்துள்ளன.

இடம்பெயர்ந்தோரது நாய்களே கட்டாக்காலிகளாக வீதிகளில் அலைந்து திரிகின்றன என்று கூறப்படுகிறது. (இ—160)

### அன்பளிப்பு

சாவகச்சேரி, அக்.15

சர்வதேச லயன்ஸ் சேவை தினத்தின்பேரில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நுணுவில் சந்திக்கு அண்மையில் உள்ள அரசினர் சிறுவர் பராமரிப்பு நிலைய சிறுவர், சிறுமியர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கியது.

லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் பே. பிலிப் உடைகள், பொம்மைகள் இனிப்பு வகைகள்,கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினுர்.

லயன்ஸ் கழகச் செயலளர் திரு. சி. சுந்தரலிங்கம் உப தலைவர் திரு. தியாகராசா ஆகியோரும் வைபவத்தில் கலந்துகொண்டனர். (இ—31)

### பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

மானிப்பாய், அக்.15

யாழ்ப்பாணம்தொழில் நுட்பக் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமையும் இன்று புதன் கிழமையும் நடைபெற இருந்த யாழ் மாவட்ட பாடசாலைகளின் உயர் வகுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 29—ஆம், 30ஆம்திகதிகளுக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக பாட வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா இதனைத் தெரிவித்தார். (இ—90)

---

வல்லிபுரக் கோயிலில் மில்க்வைற் சகாய விற்பனை

16, 17-10-86 பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர் / தீர்த்தத் திருவிழாவில், மில்க்வைற் விளம்பர விற்பனை நிலையத்தில் ரூபா 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அறிவு நூல்கள்,கிருஷ்ணர் ஸ்ரிக்கர் மில்க்வைற் செய்தி, கீரை விதைகள், பொலித்தீன் பாக் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

---

# திருகோணமலை அகதிகள் முல்லைத்தீவில் பட்டினி

## உடன் நிவாரணமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக்.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ள திருகோணமலை அகதிகள் பட்டினியால் வாடுகின்றனர்.

அரசாங்கம் வழங்கி வந்த உணவுப் பொருள்கள் நிறுத்தப்பட்டமையே இந்த நிலைக்குக் காரணம்.

ஆகவே சாவில் இருந்து அகதிகளைக் காப்பாற்ற இலவச உணவுப்பொருள்களை வழங்க அரசு மீண்டும் உத்தரவிட வேண்டும்.

இப்படிக் கோரும் அவசரத் தந்தி ஒன்றை முல்லைத்தீவு மாவட்டப் பிரசைகள் குழு ஜனுதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது.

அரசு, நிவாரணப் பொருள்கள் வழங்குவதை நிறுத்தியும் திருமலையில் இருந்து தமிழ் அகதிகள் முல்லைத் தீவு வருவது அதிகரித்துள்ளது.

கடந்த பத்து நாட்களில் சுமார் இரண்டாயிரம் அகதிகள் வள்ளங்களில் முல்லைதீவை வந்தடைந்தனர்.

சாம்பல்தீவு, சல்லி ஆகிய கிராமங்களில் ஆயுதபடையினர் நடத்திய முற்றுகையைத் தொடர்ந்தே, முல்லைத்தீவுக்கு அகதிகள் வருவது அதிகரித்துள்ளது.

இதனிடையில் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் திருமலைத் தமிழ் அகதிகள் ஊர்வலம் ஒன்றை நடத்தி அரச அதிபர் திரு. எஸ். பொன்னம்பலத்திடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். (உ—எ)

# உடுவில் பகுதியில் திருடர் அதிகரிப்பு

மானிப்பாய் அக். 15

உடுவில் கிழக்கு பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

உடுவில் கிழக்கைச் சேர்ந்த வ. இரத்தினசிங்கம் என்பவரின் வீட்டினுள் திருடர் புகுந்து பணம், கைக்கடிகாரம் ஆகியவற்றை களவாடிச் சென்றனர்.

திருடர்கள் பணப் பெட்டியை களவாடிச் சென்று அதில் இருந்த ரொக்கப்பணத்தைக் கையாடிய பின் சில்லறைப் பணத்துடன் பெட்டியை வேலிக்கருகாமையில் வீசிவிட்டு சென்றுள்ளனர்.

இப் பகுதியில் முன்னரும் சில வீடுகளில் களவு, கொள்ளை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ—90)

# சேவை செய்வதிலே தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர்

## பிரியாவிடைவைபவத்தில்உரை

மண்டைதீவு, அக்.15

சேவை செய்வதிலேயே தம் வாழ்நாளை கழித்துவரும் பங்குத் தந்தை அருட்திரு. யோ. நிக்லஸ் விமலன் அடிகள். பிற சமயத்தவர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிய இவரது சேவையை என்றும் மறக்க முடியாது.

மண்டைதீவு —அல்லைப்பிட்டி பங்குத் தந்தை அருட்திரு. நிக்லஸ் விமலன் அடிகள் இடமாற்றம் பெற்றுச் செல்வதையிட்டு அவருக்கு நடைபெற்ற பிரியா விடை வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அல்லைப்பிட்டி உப தபால் அதிபர் திரு. எஸ்.இரத்தினசபாபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அல்லைப்பிட்டி றேமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அதிபர் திரு. தேவதாசன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

முன்னுள் கிராம சபைத்தலைவர் திரு.எஸ் தவவிஞயகம் உட்பட பலர் கலந்து கொண்டு அவரது சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்கள். (இ—88)

# பொதுமக்கள் நிதி உதவி செய்தால் யாழ் பல்கலைக்கழகத்தில் நாதஸ்வர, தவில் பயிற்சி

யாழ்ப்பாணம், அக்.15

பொதுமக்கள் நிதி உதவி அளித்தால் பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழுவின் அனுமதி பெற்று யாழ் பல்கலைக் கழகத்தில் நாதஸ்வர, தவில் பயிற்சித் துறையை ஆரம்பிக்க முடியும்.

யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் இப்படிச் சொன்னுர்.

தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலய மண்டபத்தில் நாதஸ்வர — தவில் பயிற்சிப் பாடசாலையை யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கமும் மற்றும் பிரமுகர்களும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

வைபவத்தில் பேசுகையிலேயே பேராசிரியர் வித்தியானந்தன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

பாட்டு,நடனம்,வீணை, வயலின், மிருதங்கம் போன்ற கலைகளுக்கு பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவில் இடமளிக்கப்பட்டுள்ளது. நாதஸ்வர, தவில் கலைகளுக்குத் தான் இடமளிக்கப்படவில்லை.

சைவ சித்தாந்தத் துறையை பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டதைப் போல் இக்கலைகளுக்கும் இடமளிக்க நிதி உதவி தேவைப்படும்.

பொதுமக்கள் உதவியுல் பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் அனுமதி பெற்று இக்கலைகளையும் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்க முடியும்—

இப்படி பேராசிரியர் வித்தியானந்தன் சொன்னுர்.

யாழ் அரச அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் பேசுகையில், நாதஸ்வர -தவில் கலைகளுக்கு பல்கலைக் கழக அந்தஸ்து பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளை அழிய விடாது பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுசொன்னுர்.

யாழ் மாவட்ட அமைச்சுச் செயலாளரும் உதவி அரச அதிபருமான திரு.எஸ். பி.பாலசிங்கம் தலைமை வகித்தார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் பேசினர்.

யாழ் மாவட்டக் கலைப் பேரவையினரால் நடத்தப்படும் இப்பாடசாலையில் தவில் பயிற்சிக்கு 17 பேரும் நாதஸ் வரப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# விதை நெல் இல்லாமல் நெற் சாகுபடி செய்வதற்கு புதிய முறை கண்டுபிடிப்பு!

விதை நெல் இல்லாமலேயே நெல் சாகுபடி செய்யும் புதிய முறை ஒன்றை சீன விவசாய நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

அறுவடை செய்தநெல்லின் அடிப்பகுதியை உபயோகித்து நெல் சாகுபடி செய்வதே இந்தப் புதிய முறையாகும்.

இப்புதிய பயிர்ச் செய்கை முறை சீனுவில் யாங்ஸீ ஆற்றின் கீழ்ப் பகுதியில் உள்ள விவசாயப் பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரிசிஉற்பத்தியில் சீனுவின் மூன்றுவது திட்டம் இது என்று விவசாய நிபுணர்கள் ஆணைக்குழு இந்தப் புதிய முறைக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டது. பல ஆண்டுகளாக நடந்த சோதனையைத் தொடர்ந்தே புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டது.

புதிய நெற் சாகுபடி முறை வருமாறு:—

முற்றிய நெற்பயிர்கள் அறுவடையானதும், வயல் நிலத்தில் காணப்படும் ஒட்டுக்கள் என்று அழைக்கப்படும் நெற்பயிர்களின் அடிப்பாகம் மண்ணுடன் தோண்டி எடுத்து வெயில் விழக்கூடிய இடத்தில் வைக்கப்படும். அவை இரண்டு படை பிளாஸ்டிக் சீட்டினுல் மூடப்படும். ஒரு படை வைக்கோலினுல் (3—4செண்டி மீட்டர் பருமன் உயரமாக)மூடப்படும்.

குளிரில் தாக்கப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கம். வசந்தத்தின் போதுஇந்தப்'போர்வை' நீக்கப்படும். அப்போது 4 இலைகளுடன் கூடிய மட்டங்கள் வெடித்து முளைத்திருக்கும்.

அவற்றைப் பிடுங்கி வேறொரு இடத்தில் நட வேண்டும்.இப்படி மூன்று முறைகள் செய்ய வேண்டும். அதன் பின்னர் பிடுங்கி வயலில் நாற்று நட வேண்டும்.

ஒரு ஹெக்டர் காணியில் நடுவதற்கு அறுவடை செய்யப்பட்ட நெற்பயிர்களில் சுமார் 1,500அடி மட்டங்கள் தேவை.

அந்தஅடிமட்டங்களில் இருந்து வளர்க்கப்படும் நெற்பயிர்களே நாற்று நடப்போதுமானது. (அ-எ)

### இராமகிருஷ்ணர் ஜெயந்தி தினம்

பருத்தித்துறை அக். 15

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழாவையொட்டிய நிகழ்ச்சிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆச்சிரம பீடாதிபதி சுவாமிகள் சித்ரூபானந்த தலைமையில் நடைபெறும்.

"ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கம்" என்ற தலைப்பில் கலாநிதி நா. சுப்பிரமணியன் சிறப்புச் சொற்பொழிவாற்ற உள்ளார்.

மேலும் இராணுவ அத்துமீறல்களினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அன்றைய தினம் நிவாரண உதவிகளை வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். சுப்பிரமணியம் வழங்குவார். (உ—118)

யாழ். பாடசாலைகளுக்கிடையில்

# இசை, நடன, நாடக இறுதிப் போட்டிகள்

## 18,19 ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்.அக்.15

யாழ் கல்வித் திணைக்களத்தால் யாழ் மவாட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப் படும் இசை, நடன, நாடக மாவட்ட ரீதியான இறுதிப் போட்டிகள் இம் மாதம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

வட்டார, கொத்தணி ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்றித் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளும், மாணவர்களும் இப் போட்டியில் பங்கு பற்றுவர்.

18 ஆம் திகதி சங்கீதம், இசை ஆகியவற்றுடன் வரலாற்று, சமூக நாடகப் போட்டிகளும்— 19 ஆம் திகதி நடனம், நாட்டிய நாடகம் ஆகிய போட்டிகளும் இடம் பெறும்.

பிரதம கல்வியதிகாரி திரு. வி. தங்கராச தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

இப் போட்டிகளுக்கான அறிவித்தல்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.(உ — 5)

# ஐக்கிய நாணய சங்க சேவை மகத்தானது

வேலணை, அக். 15

ஐக்கிய நாணய சங்கங்கள் இந்த நாட்டிலே ஆற்றிய சேவைகள் மகத்தானவை.

வேலணை மேற்கு தலைகாட்டி ஐக்கிய நாணய சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு.தா. சந்திரசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சந்திரசேகரம் தொடர்ந்து உரையாற்றுகையில், 1987 ஆம் ஆண்டு முதல் வீட்டுக் கடன்கள் யாவும் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாகக் கொடுபடவுள்ளன.

ஆதலால் இத்தகைய சங்கங்கள் ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் உருவாக்கப்பட வேண்டும்.

இவற்ருல் ஏற்பட உள்ள நன்மைகளையும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ருர்.

கூட்டத்தில் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும், யாழ் ஐக்கிய நாணய சங்க சமாச சிரேஷ்ட உறுப்பினருமான திரு. இரா.லோகநாதன், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். கே.முருகையா, வேலணை விசேஷ சேவை உத்தியோகத்தர் திரு. கே. கணேசலிங்கம், சங்கச் செயலாளர் திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (இ—[illegible])

### பிரசைகள் குழுக்களுடன் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம். அக். 15

வன்செயல்களில் பாதிக்கப்பட்டு கால்களை இழந்தவர்கள் ஜெய்ப்பூர் கால்கள் பொருத்துவது தொடர்பாக தாங்கள் வசிக்கும் பிரசைகள் குழுக்களுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இந்தப் பணியில் அன்னையர் முன்னணி ஈடுபட்டு உள்ளது. (உ—ஈ)

யாழ் மாவட்டத்தில்

# உலாந்தா இன கறிமுருங்கை நடும்படி ஆலோசனை

பருத்தித்துறை,அக்.15

யாழ் மாவட்டத்திலுள்ள சகல வீடுகளிலும் உலாந்தா இன கறி முருங்கை நடப்பட்ட வேண்டும். இது மட்டுமே கிருமிநாசினி பாவிக்காத சுத்தமான மரக்கறி வகை ஆகும். எம் மக்களுக்குத் தேவையான இரும்பு, கல்சியம், பொசுபரசு மற்றும் உயிர்ச்சத்துக்கள் இதில் உள்ளன.

யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை இவ்வாறு குறிப்பிட்டார்.

அம்பன் விவசாயப் போதனுசிரியர் பிரிவில் விவசாய விஸ்தரிப்பு சேவைப் பகுதியினரும் விவசாய ஆராய்ச்சிப் பகுதியினரும் இணைந்து கலந்துரையாடல்ஒன்றை நடத்தினர்.

அம்பன் விவசாயப் போதனுசிரியர் திரு. வ. பரமேஸ்வரன் தலைமையில் அம்பன் அரசினர் தமிழ் வித்தியாலய கலை அரங்கில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

ஒவ்வொரு விவசாயியும் தமக்குத் தேவையான மரக்கறி வகைகளை தமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டும்.

வீட்டுத்தோட்டத்தை சகல மக்களும் அமைக்க வேண்டும். முக்கியமாக தாதுப்பொருள்கள் நிறைந்த பொன்னுங்காணி, கீரை வகைகளை பயிரிடுதல் அவசியம் ஆகும்.

எமது பகுதி விவசாயிகள் பருவகாலம் தோறும் ஒரே பயிரையே உற்பத்தி செய்கின்ருர்கள். இதனுல் உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சி அடைகிறது.

விவசாயிகள் சங்கங்களை அமைத்து சந்தைமானத்தை இக்காலகக் கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளுவதே சிறப்பானதாகும்.

இப்படி அவர் கூறினுர்.

### கராம்புச் செடி பூக்க மறுப்பதேன்?

கொழும்பு அக். 15

மலையகத்தில் கராம்புச் செடிகள் பூக்க மறுக்கின்றன.

காலநிலையில் ஏற்பட்ட மாறுதல்களே இதற்குக் காரணம் என்று விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொத்மலை, விக்ரோறியா நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்ட பின்னர்தான் இக் காலநிலை மாற்றம் ஏற்பட்டதாக கராம்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு கராம்பு ஏற்றுமதி 294 தொன்னுக வீழ்ச்சி கண்டது. 1984 இல் சுமார் 1,000 தொன் ஏற்றுமதியானது.

உலகின் கராம்பு உற்பத்தி சுமார் 55 ஆயிரம் தொன் [illegible] படுகிறது. (இ-எ)

### பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் ரூபேந்திரா

பரமானந்தம் — ஜெயலட்சுமி தம்பதிகளின் இரண்டாவது புதல்வன் ரூபேந்திரா தனது முதலாவது பிறந்த நாளை உடுப்பிட்டியில் கொண்டாடுகின்ருர். இவரை அப்பா, அம்மா, திருகோணமலை அப்பப்பா, ஐயா, அம்மா மற்றும் அனைவரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்ருர்கள்.


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்றவார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளினேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்புக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.



## GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு

உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இறைவனைத் தாய்மையான மனத்தோடு வணங்குங்கள்! துன்பம் அகன்று இன்பம் பெறுவீர்கள்.

— ஜகத்குரு ஸ்ரீஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - ஒரு இலக்கை

இல. 15 வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
15-10-1986 த.பெ. இல. 23

# இருநாள் சோகம்; புதிதாய் ஓர் அலை

யாழ்ப்பாணம் கடந்த இரண்டு நாட்களாகத் துக்கத்தில் மூழ்கியிருந்தது. யாழ்ப்பாண நகரம் என்று மட்டுமன்றி குடா நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் துக்கம் பரவியிருந்தது.

தந்தை செல்வநாயகம் இறந்தபோது, அன்னை இந்திரா மரணமானபோது காணப்பட்ட அதே துக்கமும் சோகமும் குடாநாட்டைக் கவ்வி இருந்தன.

மன்னாரில் மரணித்த வீரவேங்கை- மறத்தமிழ் இளைஞன் விக்ரரின் வீரமரணம் மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியதைக் கண்ணால் காணமுடிந்தது.

தனி ஒரு விக்ரரின் மரணம் அப்படி என்ன பெரிதாகி விட்டது? எத்தனையோ தமிழ் இளைஞர்கள் இதுவரை மடிந்திருக்கிறார்களே. அவர்களுக்கு இல்லாத துக்க அனுஷ்டிப்பும் சோக நிகழ்ச்சிகளும் அவசியம்தானா என்று ஒரு சிலர் கேட்பது எங்களுக்குத் தெரியாமல் இல்லை

போராளி என்று புறப்பட்டவர் இறப்பது பெரிதல்ல. மரணம் அவருக்கு நிச்சயம். அதனை அவரே எப்போதும் எதிர்பார்த்து இருந்திருப்பார். அவ்வாறாயின் அவரது மரணத்தைப் பெரிதாக்கித் துக்கம் கொண்டாடுவது பொருந்துமா? ஒவ்வொரு போராளி இறக்கும்போதும் அவ்வாறே கொண்டாடினால் போராட்டம் என்னாவது? -இவ்வாறு இன்னொரு சாரார் கேட்பதும் காதில் விழாமல் இல்லை.

விக்ரர் தனிமனிதன்; போராளி; ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர். அவை உண்மையான அம்சங்கள்.

ஆனால் அவர் ஓர் இலட்சியத்துக்காகத் தனது சகபாடிகளை வழி நடத்திய தலைவன். அதனை மறந்துவிடமுடியாது.

ஒரு மாவட்டத்தின் போராளிகள் சேனையை வழிநடத்திய தமிழ் மண்ணின் மைந்தன். அவன் ஒரு சேனைத் தலைவன். அதனால் அவனது இழப்பு ஓர் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல; இலட்சியத்துக்கு ஏற்பட்ட இழப்பு; தமிழ் மண்ணுக்கு ஏற்பட்ட இழப்பு.

அதேவகையில் எந்த இயக்கத்தின் தானைத் தளபதியை இழக்க நேரிடினும் அது மண்ணுக்கு ஏற்படும் பெரும் இழப்பாகவே கருதப்படவேண்டும்.

சாதாரண போராளிகளை அல்லது சிப்பாய்களைத் தாராளமாக உருவாக்கலாம். ஆனால் அவர்களைத் தக்கவாறு, சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய சேனைத் தலைவர்களை அல்லது சேனாதிபதிகளை உருவாக்குவது கடினம். அவ்வாறு கஷ்டப்பட்டு உருவாக்கிய சேனாதிபதிகளை இழக்க நேரிடும்போது அது சாதாரண இழப்பாக எடைபோட முடியாத ஒன்றாகும்.

விக்ரரின் இழப்புக் குறித்து அவரது அணியைச் சேர்ந்தவர்கள் சோகமுறுவதையும், துக்கம் கொண்டாடுவதையும் குறித்து எவரும் கேள்வி எழுப்பமுடியாது. அதனைப் பெரிய பொருட்டாக மதிக்கவும் நியாயமில்லை. அது அவர்களின் மனோநிலையையும், பக்குவத்தையும் பொறுத்தது.

ஆனால் விக்ரரின் மரணத்தை தமது சொந்தப் பிள்ளையின் மரணமாக மக்கள் கருதியது ஏன்? அந்த வீர மைந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட வேண்டும் என்று பல்லாயிரக்கணக்கான மக்கள் அவசரப்பட்டது ஏன்? முண்டியடித்துக் கஷ்டப்பட்டது ஏன்?

போராளிகளின் முகாம்களுக்குச் சென்று வது அஞ்சலி செலுத்த வேண்டும் என்று எங்கிருந்து துணிவு வந்தது? யாரும் அவர்களை வற்புறுத்தினார்களா? கட்டாயப் படுத்தினார்களா? துப்பாக்கி முனையில் நிர்ப்பந்தித்தார்களா?

அவ்வாறாயின், விக்ரரின் நிறம் கறுப்பா, வெளுப்பா என்று முன்பின் தெரியாதவர்கள் கூட விக்ரருக்கு அஞ்சலி செலுத்த முனைந்தது ஏன்? தாய்க்குலமே திரண்டு சென்றது ஏன்? எதற்காக?

இவற்றுக்குப் பதில்கள் உண்டா?

மக்கள் மன உணர்வு அப்படியாகிவிட்டது. விடுதலை வேட்கை அவர்களிடம் மேலோங்கி விட்டது. அந்தத் தங்குதடையற்ற வேட்கையை யாராலும் தடுக்க முடியாது. அந்த மன அலை—புதிய அலை மக்கள் உணர்வில் உள்ளத்தில் பொங்கி பிரவகிப்பதைக் காண முடிகிறது. இறப்பதற்கும் பின்னிற்காத ஒரு மனத் துணிவு அவர்களுக்குப் பிறந்திருக்கிறது. அவ்வளவு தான்!

தமிழ் மக்களின் இந்தப் புதிய மன அலையை ஸ்ரீலங்கா அரசு சற்று தீர்க்க ஆராய்ந்து தனது செயற்பாடுகளை நிதானப்படுத்திக் கொள்ளுமா? அல்லது இப்படியாகி விட்டார்களே விட்டுவைக்கக் கூடாது என்று எண்ணித் தமிழரைக் கொல்லுமா?

## ஒட்டகப்புலம் றோ. க வித்தியாலயத்தில் பெரும் இட நெருக்கடி

பலாலி, அக். 15

ஒட்டகப்புலம் அரசினர் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையும், தளபாட பற்றாக் குறையும் இடநெருக்கடியும் நிலவுகின்றன.

வயாவிளான் சந்தியில் தற்போது இராணுவக் காவல் நிலையமாகமாறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஏர்ஷாட் மீண்டும் வெற்றி வாய்ப்பு

## பங்களாதேஷில் இன்று தேர்தல்

டாக்கா, அக். 14

பங்களாதேஷில் இன்று புதன்கிழமை ஜனாதிபதி தேர்தல்கள் நடைபெறுகின்றன.

இன்றைய தேர்தல்களில் ஜனாதிபதி ஏர்ஷாட் மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என பங்களாதேஷ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஏர்ஷாட்டை எதிர்த்து 12 வேட்பாளர்கள் இன்று போட்டியிடுகின்றனர்.

வங்கத் தந்தை ஷேக் முஜிபூர் ரஹ்மானின் கொலைக்கு முக்கிய உடந்தையான சயீட் பருக் ரஹ்மான் இத்தேர்தலில் தான் வெற்றி பெற்றால் நாட்டின் சுதந்திர தினமாக இப்பொழுது கருதப்படும் மார்ச் 22 ஆம் திகதியை மாற்றி முஜிபூர் கொலைசெய்யப்பட்ட தினமான ஆகஸ்ட் 1ஆம் திகதியைச் சுதந்திரதினமாகப் பிரகடனப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு இரு எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வாக்குப்பதிவுகளைச் சீர்குலைக்கவே இந்த நடவடிக்கை என எதிர்க்கட்சியினர் கருத்து வெளியிட்டனர்.

ஏர்ஷாட்டைஎதிர்க்கும் முக்கிய கூட்டணிகளில் ஒன்றிற்கு ஷேக் முஜிபூர் ரஹ்மானின், மகள் ஷெய்க் ஹஸீனா வாஜெட் தலைமை தாங்குகின்றார். இன்னுமொரு கூட்டணி கொலை செய்யப்பட்ட ஸியா-உர் ரஹ்மானின் மனைவி பேகம் கலடா ஸியாவினால் தலைமை தாங்கப்படுகின்றது.

1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் தற்போதைய ஜனாதிபதி ஏர்ஷாட் பதவிக்கு வந்தார். (ஓ)

## லண்டனுக்கு விரையும் ஆஸியர்

லண்டன், அக். 14

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பகுதிகளிலிருந்து ஏராளமானவர்கள் லண்டன் வந்து சேர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

இதனால் இங்கிலாந்தின் சகல விமான நிலையங்களிலும் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது.

மேலதிக விமானங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புதிய விஸா முறைகள் வெள்ளிக்கிழமை முதல் அமுல் செய்யப்படவுள்ளதால் அதனைத் தவிர்க்கவே இவ்விதம் பலர் முற்றுகையிடுகின்றனராம். (ஓ)

### வெளி உலகில்

## அமெ - ரஷ்ய பேச்சுகள் முறிவு உலகத் தலைவர்கள் அதிருப்தி

லண்டன், அக். 14

சகல அணு ஆயுத சோதனைகள் மீதும் உடனடியாகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் றேகன் - கோர்பச்சேவ் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமை பற்றி ஏமாற்றமும் அதிருப்தியும் தெரிவித்த பல உலகத்தலைவர்கள் இக்கருத்தையும் வலியுறுத்தினர்.

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படாமல் போனதை ஆயுதப்போட்டியை தீவிரப்படுத்தவோ உலக அமைதிக்கு மிரட்டல் ஏற்படுத்தவோ அனுமதிக்கக் கூடாது எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இரு நாடுகளும்படைக் குறைப்புக்கு தொடர்ந்தும் முயல வேண்டும் என்று ஐ. நா. தலைமைச் செயலர் பெரஸ் டி கியுலர் தெரிவித்தார்.

பேச்சுமுறிந்துபோனது வருத்தமளிக்கக் கூடியது என்று ஜப்பான் பிரதமர் நாகஸோனியும் கிழக்கு ஜேர்மன் தலைவர் ஹோனேக்கரும் கூறினர்கள்.

ஐந்து கண்டங்களின் நாடுகள் மேற்கொண்ட அமைதி முயற்சிக்கு அதி முக்கியத்துவமும் அவசரத் தன்மையும் ஏற்பட்டுள்ளது என்றார் இந்திய பிரதமர்

மேலும் முன்னேற்றம் காணுவதற்காக தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை நடத்தும்படி வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைச்சர்கள் வல்லரசுகளை வற்புறுத்தியுள்ளனர். (ஓ)

<u>இந்து சமுத்திரத்தை</u>

## சர்வதேச மாநாடு மூலம் அமைதிப் பிராந்தியம் ஆக்குக

ஜகார்த்தா, அக். 14

இந்துமாகடல் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் பெருகி வருவது கவலைக்குரியது. இந்துமா கடலை அமைதிப் பிராந்தியமாக்குவதற்குச் சர்வதேச மாநாடொன்றை ஏற்படுத்த வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இந்தோனேஷியப் பயணத்தை முடித்துக் கொண்டு அவுஸ்திரேலியா செல்லவிருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

கம்பூச்சியாவில் இருந்து அந்நியப்படைகள் வெளியேறுவது பேச்சுவார்த்தை மூலமே சாத்தியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி சுகார்ட்டோ பேசுகையில் ராஜீவ் காந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் சர்வதேச பிரச்சினைகள் பலவற்றிற்குப் பலனளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது என்றார். (ஓ)

## அபாயத்தை தேடியவர்கள்

சென்னை, அக். 14

வடசென்னையில் குடியிருப்புப் பகுதியொன்றில் கிணறு ஒன்றின் மேற்பகுதி இடிந்து விழுந்ததால் ஐவர் பலியாகி இருக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்து நேரிட்ட போது இவர்கள் கிணற்றின் மேல் கட்டில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிணற்றிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்ட பின்னர் தான் இந்த விபத்தில் சிக்கினோர் தொகை தெரியவரும் என்று தீயணைப்பு படையினர் அறிவித்தனர். (ஓ)

## நாளை உலக உணவு தினம்

ரோம். அக். 15

நாளை வியாழக்கிழமை உலக உணவு தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் உணவு விவசாய ஸ்தாபனம் இதனை அறிவித்துள்ளது.

இத்தினம் மீனவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் மீனவர்கள் அலட்சியம் செய்யப்படுவதாகவும் உணவின்றி கஷ்டமுறுவதாகவும் தெரிவித்தது. (ஓ)

## சிலைகளுக்கு கல்யாணம்

வாஷிங்டன், அக். 14

அமெரிக்காவை முதன்முதலில் சென்றடைந்த கொலம்பஸ் இன்று சம்பிரதாய பூர்வமாக அமெரிக்காவின் சுதந்திரச் சிலையை மணம் புரிந்தார்.

கொலம்பஸின் சிலை அமைக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டும், சுதந்திரச் சிலையின் 100 வயது கொண்டாட்ட நினைவுகளை முன்னிட்டும் நியூயோர்க் நகரபிதா ஏராளமான மக்கள் முன்னிலையில் இத் திருமணத்தை நடத்தி வைத்தார்.

கொலம்பஸ் 500 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவை கண்டுபிடித்தார். (ஓ)

## சமரசமும் கொலைகளும்

மணிலா. அக். 14

கம்யூனிஸ்ட் கெரில்லா தலைவர்கள் பிலிப்பீன்ஸ் அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

எனினும் ஏற்கனவே தம்மால் திட்டமிடப்பட்ட பொது மக்கள் மற்றும் ராணுவ இலக்குகளை அவ்வப்போது கொலை செய்வதும் தவிர்க்க முடியாதது என தெரிவித்தனர். (ஓ)

## அல்போன்ஸா ரஷ்ய விஜயம்

புவனர்ஸ்அயர்ஸ்,அக்.14

ஆர்ஜென்டீனா ஜனாதிபதி ரால்ப் அபோன்ஸா நான்கு நாள் பயணம் மேற்கொண்டு ரஷ்யா சென்றுள்ளார்.

கடந்த 40 வருடங்களில் ரஷ்யாவிற்கு விஜயம் செய்யும் முதலாவது ஆர்ஜென்டீனா தலைவர் இவராகும். (ஓ)

# இடமாற்றம், பதவி உயர்வு, சம்பள விவகாரங்களில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

யாழ்ப்பாணம், அக். 15

இடமாற்றம், பதவி உயர்வு, சம்பளம் வழங்கலில் தாமதம் ஆகியவை ஆசிரியர்கள் மத்தியில் விரக்தியையும், வீண் சிரமங்களையும் ஏற்படுத்துகின்றன.

வடமாகாண ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் குழு வடமாநில கல்வித் திணைக்களத்தினரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறியது.

இச் சந்திப்பு தொடர்பாக வடமாகாண ஆசிரியர் சங்க மாவட்டச் செயலாளர் திரு. வே. சிவராசா விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் உள்ள ஏனைய விவரங்கள் வருமாறு;

ஆசிரிய இடமாற்றங்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் நடைபெற வேண்டும். ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடமாற்ற சபைகள் இயங்கிய காலத்தில் இவை சீராக நடைபெற்றன. அத்தகைய இடமாற்றத் திட்டத்தில் கஷ்டப் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கால எல்லையில் சலுகை வழங்கப்பட வேண்டும்.

எந்த ஓர் அரச ஊழியரும் தனக்குரிய வேதனத்தை மாத இறுதியில் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

ஆசிரியர்களைப் பொறுத்த அளவில் பிற மாவட்டங்களில் இருந்து மாற்றலாகி வரும் ஒருவர் தமக்குரிய முழுச்சம்பளத்தையும் பல மாதங்கள் கழித்தும் பெறமுடியாத நிலை நிலவுகிறது.

கல்வித் திணைக்கள நிர்வாக நடைமுறைச் சுணக்கமே இதற்குக் காரணம். ஓர் ஆசிரியர் இடமாற்றம் பெறும்போது அவரது சுய விவரக் கோவையும், சம்பள விவரப் பட்டியலும் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களப் பிரிவினால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். ஆனால் இப்போது அவ்வாறு நடைபெறுவதில்லை.

கல்வித் திணைக்களம் தானகப் பெற்றுக் கொள்ள வேண்டிய இவ்விவரங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தாமாகப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்கப்படுகின்றார்கள். இந்த நடவடிக்கை அதிருப்தியைத் தருகிறது. உரிய மாதத்தில் வழங்க ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் வருடாந்த வழமையான சம்பள உயர்ச்சியைப் பெறுவதில் பெரிதளவு கால தாமதம் ஏற்படுகிறது வழமையான வருடாந்த சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களின் சம்பள உயர்ச்சியில் அநாவசியமாகக் காலதாமதம் ஏற்படலாகாது.

இவ்வாறு அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-9)

### சமய சந்நிதிகளில்

## தேர்த்திருவிழா

பருத்தித்துறை, அக். 15

வடமராட்சிப் பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சித்திரத் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை கடற் தீர்த்தோற்சவமும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை கேணித் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-118)

## திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், அக். 15

வண்ணை வடமேற்கில் (ஆனைக்கோட்டை) எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலா பௌர்ணமி பூசையைத் தொடர்ந்து திருவிளக்குப் பூசை நடைபெறும்.

இப் பூசையில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே ஆலயத்தோடு தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இது, இந்த வருடத்திய 14 ஆவது தீப பூசை ஆகும். (இ)


## சின்னம் சூட்டுவிழா

மானிப்பாய் அக். 15

நவாலி மகாவித்தியாலய சாரணர் குழுவினருக்கான சின்னம் சூட்டு விழா இன்று புதன் கிழமை பகல் நடைபெறும்.

அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.எஸ். தனஞ்செயன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார். (ஓ-90)

### பொய்யாமொழி



குறள்:

எள்ளாமை வேண்டுவான் என்பான்
எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு

பொருள்:

பிறரால் இகழப்படாமல் வாழவிரும்புகின்றவன் எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள எண்ணுதபடி தன் நெஞ்சைக் காக்கவேண்டும்.

## விழிப்புலன் அற்றோருக்கு உதவும் வெள்ளைப் பிரம்பு தினம்

அனைத்துலக வெள்ளைப்பிரம்புதினம் இன்று.

இத்தினம் விழிப்புலன் அற்றோருக்கு நம்பிக்கை உணர்வையும் தெம்பையும் ஊட்டும் பெருநாள்.

சமூகத்தில் வேண்டப்படுபவர்கள் என்ற எண்ணத்தை மட்டுமல்ல, தங்களிடம் திறமை உண்டு என்ற தன்னம்பிக்கையையும் விழிப்புலனற்றோருக்கு ஊட்டும் தினமாக இது கணிக்கப்படுகிறது.

விழிப்புலனற்றோருடன் சேர்ந்து பொதுமக்களும் இத்தினத்தைக் கொண்டாடுவர். எனவே தான் லயன்ஸ் கழகங்களும் இத்தினத்தை பெரிய அளவில் கொண்டாடி வருகின்றன.

இத்தினத்தில் வெள்ளைப்பிரம்பு இல்லாத விழிப்புலனற்றோருக்கு வெள்ளைப்பிரம்பு வழங்கப்படும்.

வெள்ளைப்பிரம்பு என்றால் என்ன?

இவ்வெள்ளைப் பிரம்பு வெள்ளைநிறமுள்ள மெல்லிய உலோகத்திலான பிளாஸ்டிக் சேர்வையிலான மடிக்கக்கூடிய தான நீளமான பிரம்பு ஆகும்.

அனைத்து நாடுகளும் சர்வதேசரீதியில் இதை ஏற்றுக் கொண்டுள்ளன.

இப்பிரம்பை விழிப்புலனற்றோர் கையில் கொண்டு செல்லும் போது பொதுமக்கள் இனங்கண்டு வேண்டிய உதவிகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

வெள்ளைப் பிரம்பின் தத்துவத்தை உணர்த்து முகமாகத்தான் விழிப்புலனற்றோர் இன்றைய தினத்தில் ஊர்வலம் ஒன்றை நடத்துகின்றனர்.

விழிப்புலனற்றோரும் சமூகத்தின் ஓர் அங்கமே. திறமையை விருத்தி செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் இது சமுதாயத்தின் முக்கிய கடமை. அப்படிச் செய்யின் சமூகத்துக்குச் சுமையாக விழிப்புலனற்றோர் இருக்கமாட்டார்கள்.

வாழ்வுக்கு வேண்டியவற்றை சுய உழைப்பின் மூலம் அவர்கள் பெறக் கூடியதாக இருக்கும்.

இவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமையாகும். லயன்ஸ் கழகங்கள் போன்ற தொண்டர் நிறுவனங்களும் விழிப்புலனற்றோருக்கு உதவ பின்னிற்கக் கூடாது.

லயன் த. சண்முகநாதன்,
கோப்பாய் லயன்ஸ் கழகம்.

## இன்று கொடி தினம்

யாழ்ப்பாணம், அக்.15

இன்று சர்வசதசவெள்ளைப் பிரம்பு தினமாகும். இத்தினத்தை முன்னிட்டு நல்லூர் லியோ கழகத்தினர் கொடி தினமொன்றை 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ் குடாநாடெங்கும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கொடிதினம் மூலம் சேகரிக்கப்படும் பணம் கைதடி நவ்வீல்ட் பாடசாலையிலுள்ள விழிப்புலனற்ற சிறுவர்களுக்கு சிறுவர் பூங்கா ஒன்றைஅமைப்பதற்கும், அச் சிறுவர்களுக்கான இதர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/-
✱ Processing Free
✱ விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# உதயன்

15 - 10 - 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
✱ தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
✱ கம்பியூட்டர் முறையில்
✱ குறைந்த செலவில்
✱ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## முல்லைத்தீவில் துக்கம் அனுஷ்டிப்பு

முள்ளியவளை, அக்.15

அடம்பனில் வீர மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்டினன்ட் விக்ரர், இரண்டாவது லெப்டினன்ட் ரேரும் ஆகியோரின் மறைவு குறித்து முல்லைத்தீவுப் பகுதியிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை போன்ற இடங்களில் திங்கட்கிழமையன்று வீரமரணமடைந்த போராளிகளின் படங்களுக்கு மாலை அணிவித்து தோரணங்கள் கட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமையன்று தண்ணீரூற்றுச் சந்தியிலிருந்து முள்ளியவளை காட்டு விநாயகர்சந்திவரை வீதிகளின் இருமருங்கிலும் தோரணங்கள், வாழைகள்கட்டப்பட்டிருந்தன.

நேற்று இப்பகுதியில் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகள் ஆங்காங்கே பறக்கவிடப்பட்டிருந்தன. (உ-93)

# படையினரைவெளியேறவிடாது முல்லைத்தீவிலும் தாக்குதல்

முள்ளியவளை அக். 15

கடந்த சில நாட்களாக முல்லைத்தீவு முகாமிலிருந்து ஆயுதப் படையினர் இரவில் வெளியேறுவாறு போராளிகள் தாக்கிவருகின்றனர்.

போராளிகளின் குண்டுவீச்சுத் தாக்குதலுக்குப் பதிலாக இராணுவத்தினரும் ஷெல் குண்டுகளை ஏவியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் முகாமைச் சூழ உள்ள பகுதிகளில் வசித்த மக்கள் தமது இடங்களைவிட்டு வெளியேறி வருகிறார்கள்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் ஆயுதப் படையினரால் தாக்கப்பட்டு அங்கிருந்து அகதிகளாக முல்லைத்தீவில் உள்ள தமது உறவினரிடம் வந்து தங்கியவர்கள் தற்பொழுது தமது மூடை, முடிச்சுக்களுடன் குமுளமுனைப் பக்கம் சென்று அங்கு தங்குவதாகவும் அறியப்படுகிறது. (உ-93)

### ஊர்வலம்

மன்னாரில் வீரமரணம் அடைந்த விக்ரருக்கு அஞ்சலி தெரிவித்து தெல்லிப்பளை யூடாக மயிலிட்டியிலிருந்து சுன்னாகம் வரை மௌன ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர். (இ-119)



கொல்லப்பட்ட படையினர் அணிந்திருந்ததாகக் கூறப்படும் 15 தலைக் கவசங்களும் நேற்றுப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன

## விக்டரின் பூதவுடலுக்கு அச்சுவேலியில் அஞ்சலி

பலாலி அக். 15

மன்னாரில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் மன்னார்த் தளபதி விக்டரின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்று அச்சுவேலிக்குக் கொண்டு வரப்பட்டது.

பல்லாயிரம் மக்கள் வீதிகளிலும், மரங்களிலும், வீட்டுக் கூரைகளிலும் நின்று பூக்களையும், மாலைகளையும் வீசி அஞ்சலி செலுத்தினர்.

இரண்டு மூன்று தடவைகள் ஹெலிக்கொப்டர்கள் பறந்து நோட்டமிட்டாலும் மக்கள் கூட்டம் கலையவில்லை.

சுமார் 12. 30 மணி அளவில் அச்சுவேலிக்கு வந்த பூதவுடல் 1. 30 மணியுடன் நெல்லியடியை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது. (இ-119)

## இனப் படுகொலையை உடன் நிறுத்துக

### காங்கிரஸ் எம். பி. கோரிக்கை

சென்னை அக். 14

இலங்கையில் இனப் படுகொலை உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் எம். பி யான திரு. ரங்கராஜன் மோகன் குமாரமங்கலம் கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இனப்படுகொலை இடம் பெறுவது தீர்வுகாண உதவாது-இப்படி திரு. மோகன்குமாரமங்கலம் மேலும் சொன்னார். (உ-எ)

## இலங்கை வானொலி இப்படியும் ஒரு "சுடச்சுடச்" செய்தி!

யாழ்ப்பாணம், அக்.15

'மன்னார் அடம்பனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மோதலில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் விக்ரரின் சடலத்தை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கும் தீவிர வாதிகளைப் பிடித்துவிட முடியும்என்று பாதுகாப்புப்படையினர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்."

இப்படி இலங்கை வானொலி நேற்று (14-10-86) மாலை 6 மணிச் செய்தி அறிக்கையில் தெரிவித்தது. விக்ரரின் பூதவுடல் கடந்த திங்கள் பகலே யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே. (இ-எ)

# ஆஸ்பத்திரி ஊழியரின் போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக்.15

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் தொடர் எதிர்ப்பியக்கப் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

இதனால் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவை மட்டுமே இயங்கின.

வெளிநோயாளர்பகுதிக்கு வந்த நோயாளர்கள் அனேகம் பேர் சிகிச்சை பெறுமலே வீடு திரும்ப வேண்டிய தாயிற்று.

எதிர்ப்பியக்கப் போராட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இன்று வெளி நோயாளர் பகுதி முற்று முழுதாக மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

சகல கிளினிக்குகளும், சிகிச்சைப் பிரிவுகளும் இன்று மூடப்பட்டிருக்கும்.

கோட்டையில் இருந்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் சேதமடைந்தன. இதனால் கோட்டையில் இருக்கும் இராணுவ முகாம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் எனக்கோரியே இந்த தொடர் எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

## பல்லாயிரக்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வையிட்டனர்.

நல்லூர் கோவில் வீதியில் இருந்து முத்திரைச் சந்தை வரை கியூ நீண்டிருந்தது.

காலை பத்து மணி அளவில் ஹெலிக் கொப்டர் ஒன்றும் சீப்பிளேன் ஒன்றும் இப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டுத் திரிந்தன.

காலை 9 மணி முதல் மாலை வரை சடலங்களும் ஆயுதங்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும், கைகள் முறிந்த நிலையில் சிப்பாய்களின் சடலங்கள் வரிசையாக கிடத்தி வைக்கப்பட்டிருந்தன. (இ-10)

## இரண்டாவது நாளாக நேற்றும் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், அக். 15

மன்னாரில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளின் லெப்டினன்ட் கேர்ணல் விக்ரருக்கும் இரண்டாவது லெப்டினன்ட் ரேமுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று யாழ்குடா நாட்டில் முழு அளவில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன. அரச - தனியார் வாகனங்கள் எதுவும் சேவையில்ஈடுபடவில்லை. நகர் வெறிச்சோடிக் கிடந்தது.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், தனியார் ரியூட்டரிகள், ஆஸ்பத்திரிகள், வங்கிகள் எதுவும் இயங்கவில்லை.

திரும்பும் இடங்கள் எல்லாம் கறுப்புக்கொடிகளும் வாழை தோரணங்களும், விக்ரரின் அலங்கரிக்கப்பட்ட படங்களுமே காணப்பட்டன.

சந்திக்குச் சந்தி சோக கீதங்கள் ஒலிபரப்பப்பட்டன. விக்ரரின் தீரம்மிகு செயலை நினைவுகூரும் உரைகள் அவ்வப்போது ஒலிபரப்பப்பட்டன.

யாருடைய கோரிக்கையுமின்றி மக்கள் தாமாகவே முன்வந்து அனுஷ்டித்த பூரண ஹர்த்தால் இது வென்று கருதப்படுகிறது. (உ-10)

### செவ்வாய் அதிகாலை

## கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்

### இருவர் காயம்; கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 15

செவ்வாய்க்கிழமை அதிகாலை சுமார் இரண்டே முக்கால் மணி அளவில் யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட திடீர் ஷெல் தாக்குதல் காரணமாக கச்சேரிப் பகுதியில் உள்ள சில வீடுகளும் கட்டடங்களும் சேதமடைந்தன.

இரண்டு பேர் காயம் அடைந்தனர்.

தொடர்ச்சியாக ஏவப்பட்ட பல ஷெல் குண்டுகள் சென்ஜோன்ஸ் கல்லூரி வளவிலும், சோமசுந்தரம் வீதியிலும், பழைய பூங்காவிலும், கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள கடை ஒன்றின் மேலும் விழுந்து வெடித்தன.

சென் ஜோன்ஸ் கல்லூரி வளவினுள் விழுந்து வெடித்த ஷெல் காரணமாக சென் ஜோன்ஸ் அங்கலிக்கன் தேவாலயக் கட்டடம் சேதமடைந்துள்ளது.

மற்றுமொரு ஷெல் இதே வளவினுள் விழுந்ததன் காரணமாக உப அதிபரின் விடுதியின் ஓடுகள் சேதமடைந்ததுடன், ஓட்டுத் துண்டுகள் விழுந்ததன் காரணமாக உப அதிபரின் மனைவி காலில் காயமடைந்தார்.

சோமசுந்தரம் வீதியில் உள்ள பீற்றர் என்பவரது வீட்டு குசினிக்குள் ஷெல் விழுந்து வெடித்ததன் காரணமாக குசினியும் அதற்குள் இருந்த தளபாடங்களும் சேதமடைந்தன.

இதே வீதியில் பீற்றர் வோட்சன் என்பவரது வீட்டு மதில் அருகில் விழுந்த ஷெல் காரணமாக மதிற்சுவர் சேதமடைந்தது.

கச்சேரி, நல்லூர் வீதியில் உள்ள 'கண்ணன் ரேடர்ஸ்' கடைக்கு மேல் ஷெல் விழுந்ததன் காரணமாக கடைக்குள் இருந்த தளபாடங்கள்' சைக்கிள் ஆகியன சேதமடைந்தன.

கடைக்குள் நித்திரையிலிருந்த இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

பழைய பூங்காவினுள்ளும் ஷெல் விழுந்ததாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## தொலைபேசி துண்டிப்பு

யாழ்ப்பாணம், அக். 15

கடந்த ஞாயிறு பிற்பகலில் இருந்து யாழ் மாவட்டத்துடனன வெளிமாவட்டத் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டுள்ளன.

லக்கலயில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் சரியான காரணம் தெரியவில்லை. (இ-எ)

## புலிகளுக்கு இவ்வளவு..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

புலிகள் ஒளித்திருந்து தாக்கி விட்டு ஓடி விடுவார்கள் என்றே எமக்குக் கூறப்பட்டது. நேருக்குநேர் நின்று போர் புரியும் துணிவு அவர்களிடம் இல்லை என்று பயிற்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களை முக்கியமாக சிங்களவரைக் கொல்வதே புலிகளின் தொழில் என எமக்குக் கூறப்பட்டது.

எம்மைப் புலிகள்சுற்றி வளைத்துத் தாக்கும் போது எம்முடன் வந்தவர்களில் அதிகமானவர்களுக்கு என்ன நடந்ததென்பது எனக்குத்தெரியாதிருந்தது.

என்னிடமுள்ள துப்பாக்கி ரவைகள் முடிந்த பின் துப்பாக்கியை வீசி விட்டேன். நடப்பது நடக்கட்டும்என்ற உணர்வுடன் கைகளைத் தூக்கியபடி கண்ணை மூடிக் கொண்டு நின்றேன்.

காலில் ஒரு சூடு விழுந்ததும் நான் கத்தினேன். என்னைப்பிடித்த புலிப் படையினர் என்னை தம்முடன் அழைத்துச் சென்றனர். என்னை மிகவும் பண்பாக நடத்தினர்.

எனினும் மரணப் பயம் இன்னும் என்னை விட்டு நீங்கவில்லை.

எனது வறிய குடும்பத்தை நான் காப்பாற்ற எனக்கு புலிகள் உயிர்ப் பிச்சையளிப்பார்களா?—

### இனிச் சேர மாட்டேன்

புலிகளுக்குத் தமிழ்மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்று அரசு எமக்குக் கூறி வந்தது. இங்கு கொண்டு வரப்பட்டபின்னர்தான் நாம் உண்மையை அறிந்து கொண்டோம். தமிழ் மக்கள் புலிகளைப்பூரணமாக ஆதரிக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

உண்மை நிலை எமக்குத் தெரிந்து விட்டது. இனிமேல் உயிருள்ள வரை நான் இராணுவத்தில் சேரமாட்டேன்.

### கோப்ரல் சொல்வது

லான்ஸ் கோப்ரல் நிமால் பெர்னுண்டோ சொன்னதாவது;

படையில் சேர்ந்தால் பெரிய அதிகாரியாக வரலாம்; நல்ல சம்பளம் கிடைக்கும் என்று கூறப்பட்ட படியால்தான் நான் படையில் சேர்ந்தேன்.

மூன்று சகோதரிகளையும் ஒரு தம்பியையும் வயோதிபத் தகப்பனையும் காப்பாற்றவே நான் இராணுவத்தில் சேர்ந்தேன். இனி எனக்கு இராணுவத்தில் சேரும் எண்ணமே இல்லை. எனது உயிர் காப்பாற்றப்பட்டுள்ளதாக நான் உணர்கின்றேன்.

என்னை எனது குடும்பத்துடன் சேர்த்து விடுமாறு மன்றாடுகிறேன். இப்படித் தனது இரு கரங்களையும் கூப்பியவாறு எமது செய்தியாளரிடம் கூறினார் அவர்.

தொடர்ந்து கதைக்க முடியாதவராக அவர் தேம்பித் தேம்பி அழுதார். (உ-எ-119)

## யாழ் ..

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

பயிற்சிக்கு 18 பேரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நாதஸ்வரப் பயிற்சியாளர்களுக்கு நாதஸ்வர வித்துவான்களான எஸ். கே. இராசா, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, என். கே. பத்மநாதன், எஸ். சிதம்பரநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி, கே. ஆர். கானமூர்த்தி, எஸ். ஆர். ஞானசுந்தரம் ஆகியோர் வித்தியாரம்பம் செய்து வைத்தனர்.

தவில் பயிற்சியாளருக்கு தவில் வித்துவான்களான பி. பழனிவேல், கே. கணேசரத்தினம், என். ஆர். சின்னராஜா ஆகியோரும்வித்தியாரம்பம் செய்து வைத்தனர்.

வலிவடக்கு உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் பயிற்சியாளருக்கு பயிற்சிப் புத்தகங்களை வழங்கினார். (இ-எ)

## ஒட்டகப்புலம் . .

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

உள்ள வயாவிளான் ஸ்ரீ வேற்பிள்ளை வித்தியாலயத்தில் கல்வி பயின்ற மாணவரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையிலிருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்ற மாணவரும் ஒட்டகப்புலம் அரசினர் றேமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பயில வந்துள்ளதாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள அதிகாரிகளும் நலன் விரும்பிகளும், பொது அமைப்புகளும் இப் பற்றுக்குறைகளை நீக்கி உதவிபுரிய வேண்டுமென பாடசாலையின் அபிவிருத்திச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-119)

# 25க்கும் அதிகமான தமிழர் அடம்பனில் சுட்டுக்கொலை

மன்னார் அக். 15

மன்னார்த் தொகுதியில் உள்ள அடம்பனில் கடந்த சனிக்கிழமையில் இருந்து இதுவரை 25 க்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர் என்று ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் தள்ளாடி முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்களை தமிழீழ விடுதலைப் புலிகள்சுற்றி வளைத்துத் தாக்கியதில் பல சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

2 சிப்பாய்கள் உயிருடன் புலிகளினால் பிடிக்கப்பட்டனர்.

இந்தச் சண்டையில் புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விக்ரர் உயிரிழந்தார்.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் என்ற பெயரில் படையினர் கடந்த மூன்று தினங்களாக நடத்தி வரும் தாக்குதலின் காரணமாகவே 25க்கு அதிகமான அப்பாவித் தமிழர் உயிரிழந்தனர் என்று அந்தச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

## தமிழர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தப் படையினர் இவர்கள்மேல் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

தம்பியாரான தர்மலிங்கம் அந்த இடத்திலேயே இறந்தார். தமையனான கந்தசாமி குறை உயிருடன் கயிற்றினால் கட்டப்பட்ட நிலையில் படையினரின் வாகனம் ஒன்றினால் வீதி வழியே இழுத்துச் செல்லப்பட்டாராம்.

இதனால் கந்தசாமியின் தோல், தசைகள் நிலத்தில் தேய்பட்டு உருக்குலைந்து விட்டது. இறுதியில் அவரும்இறந்தார். பின்னர் சடலத்தை விட்டுவிட்டு படையினர் சென்றனர்.

இறந்தவர்களின் சடலங்களை அவர்களின் உறவினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை குமுளமுனைக்குக் கொண்டு வந்து அடக்கஞ் செய்தனர். (உ-93)

## புலிகள் இராணுவத்திடம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்பட்டது என்றும் தெரியவருகிறது.

நேற்று மாலை 6 மணியளவில் 'எல்வ்வாகனம்' ஒன்றில் சடலங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. சடலங்கள் பிரேதப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன.

புலிகளின் சார்பில் பிரதிநிதி ஒருவர் எல்வ் வாகனத்தை யாழ் பொலீஸ் நிலையம் முன்பாக உள்ள தடைவாசல் வரை எடுத்துச் சென்றார்.

அங்கு சில சிப்பாய்களுடன் வந்த இராணுவ அதிகாரி ஒருவர் பிரஸ்தாப பிரதிநிதியுடன் சில நிமிட நேரம் உரையாடிவிட்டு சடலங்களைப் பொறுப்பேற்றார்.

அதன் பின்னர் புலிகளின் பிரதிநிதி வாகனத்தில் திரும்பினார். இரு தரப்பினரும் சந்தித்த போதும் சடலங்களைக் கையளித்த போதும், திரும்பிச் சென்ற போதும் எல்லாம் சுமுகமாகவே நடந்தன.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற வேளை 'சீ பிளேன்' ஒன்று அப்பகுதியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அதிலிருந்து வெளிச்சக் குண்டுகள் சிலவும் தீர்க்கப்பட்டன.

சடலங்களைப் பொறுப்பேற்பதற்கு இராணுவத்தினர் தயார் என்பதைக் குறிக்கவே இந்த வெளிச்சக் குண்டு சமிக்ஞை' போடப்பட்டதாகப் பின்னர் அறிய வந்தது. (உ-10)

## மன்னார்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாவட்டங்களிலும் அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் 24 மணி நேரத்தின் பின் நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் நீக்கப்பட்டது.

6 மணி நேர இடைவேளையின் பின்னர் நேற்று இரவு 8 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வந்தது. (உ-எ)

## இவர்களைபபற்றி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகக் கல்வி பெறும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கவில்லை.

பின்னர் மொரட்டுவ நூலகத்தில் 'பியோனு'கச் சிறிது காலம் பணியாற்றினார்.

ஆயுதப்படையில் சேர்ந்தால் 3,000 ரூபாவுக்கு மேல் சம்பளம் கிடைக்கும் என்று சொன்னபடியால் தான் படையில் சேர்ந்தேன் என்று கூறும் இவருக்கு 4 சகோதரர்கள் உள்ளனர்.

தள்ளாடி முகாமில் ஒன்றரை மாதகாலமாக எழுதுவினைஞராகக் கடமையாற்றிய இவர் கடந்த சனி நள்ளிரவுதான் அடம்பன் முற்றுகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வலது புறத்தில் காணப்படுபவர் பிரைவேற் கே. எம். எச். பண்டார. வயது 22, எட்டியாந்தோட்டை வாசி.

ஜி. சி. ஈ. சாதாரண தரம்வரை படித்த இவர் கொழும்பில் கடை ஒன்றில் வேலைபார்த்து வந்தார். நிறையச் சம்பளம் கிடைக்கும் என்ற உறுதியின் பேரில் இராணுவத்தில் சேர்ந்ததாகக் கூறுகிறார்.

முதலில் அம்மேபுஸ முகாமில் இருந்தார். போராளிகளிடம் அகப்படுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர்தான் இவர் தள்ளாடி முகாமுக்கு கொண்டுவரப் பட்டாராம். (அ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி:- 15 — 10 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Numbe- QJ60N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org